யாழ்ப்பாணம்
27 AUG

# வர்த்தகன்

மலர் 1 ஆவணி 1986 இதழ் 1

**சமர்ப்பணம்**

விடுதலைக்காகத் தம் உயிர்களை அர்ப்பணித்தவர்களுக்கும், அரச படைகளினல் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும், இனக்கலவரங்களின்போது பலியானவர்களுக்கும் இவ்விதழ் சமர்ப்பணம்.

# அரசு இதுவரை காலமும் செய்த பாவங்களுக்கு இனியாவது பிராயச்சித்தம் தேட வேண்டும்

விரைவில் ஆயிரம் மீற்றர் பாதுகாப்புவலையச் சட்டம் மிகத் தீவிரமாக அமுலாக்கப்படலாம் எனவும், எந்நேரமும் அரசபடைகள் பெருந்தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளலாம் எனவும், பாதுகாப்பு வட்டாரங்களையும், பத்திரிகைச் செய்திகளையும், மேற்கோள் காட்டிப் பரவலாகப் பேசப்படுகிறது.

இச்செய்திகள் உண்மையானல், ஏற்படப்போகும் விளைவுகளோ எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்குப் பயங்கரமானவைகளாக இருக்கப்போகின்றன, இம்மண்ணின் சரித்திரத்தையே மாற்றியமைக்கப் போகின்றன.

கோட்டை முகாமைச் சுற்றியுள்ள ஆயிரம் மீற்றர் பிரதேசம்தான் யாழ் நகரின் மையப்பகுதி; அதன் உயிர்நாடி. பிரபல கல்லூரிகளும், பாடசாலைகளும், பிரதான வைத்தியசாலையும், தனியார் மருத்துவ மனைகளும், ஆயிரக்கணக்கான வர்த்தக நிலையங்களும் பெரும்பாலான அரச, கூட்டுத்தாபன, தனியார் அலுவலகங்களும், பல வழிபாட்டுத்தலங்களும், பிரதம வங்கிகளும் இப்பிரதேசத்திற்குள் தான் அடங்கியுள்ளன. குடிசன நெருக்கமான பிரதேசமும் இதுதான்.

இப்பிரதேசம் பாரிய தாக்குதலுக்கு உள்ளாகுமானல் ஏற்படப்போகும் இழப்புகள் இதுநாள்வரை ஏற்பட்டவைகளைவிடப் பன்மடங்காக இருக்கும். ஈடுசெய்யமுடியாத உயிரிழப்புகளும் பொருள் இழப்புகளும் இடம்பெறும்.

இது தேவைதான என்பதை ஆட்சியிலிருப்பவர்கள் சிந்திக்கவேண்டும். இனியாவது அழிவில் இருந்து தமிழ் மண்ணில் உள்ள மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

எம்மவர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினர்கள், நடைபவனிகளின்போதும் ரோந்து நடவடிக்கைகளின் போதும் இங்கு உண்மையில் என்னென்ன அனர்த்தங்கள் விளைவிக்கப்பட்டன, பயங்கரவாதத்தின் பெயரால் படுகொலை செய்யப்பட்டவர்கள் யார் யார் என்பவை பற்றிய விபரங்களை நாம் தெரிந்து வைத்திருப்பதை விட ஆட்சியில் உள்ளவர்கள் நன்கு அறிந்துவைத்திருக்கிருர்கள். ஆனல் உண்மையான விபரங்களை ஒப்புக்கொண்டால் உலகநாடுகளின் ஏகோபித்த கண்டனங்களுக்கு தாம் இலக்காகி விடுவோம் என்பதாலும், இதுவரைகாலமும் தாம் திரைமறைவில் நடாத்திவரும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றிய இரகசியங்கள் அம்பலத்திற்கு வந்துவிடும் என்ற அச்சத்திலும் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க அரசு படாத பாடு படுகிறது.

ஜனநாயகம் ஏட்டளவில் இருக்கக்கூடாது. சமத்துவமும் சமாதானமும் பேச்சளவோடு நின்றுவிடக் கூடாது, இவை செயல் வடிவம் பெற வேண்டும்.

புத்த தர்மத்தைப் பேசிக்கொண்டு பிறமதத்தவர்களின் கோவில்களையும், பள்ளிவாசல்களையும், நாசப்படுத்துவதால் புத்தமதத்திற்குப் பெருமை ஏற்படப் போவதில்லை. பச்சைக் குழந்தைகளையும் பாடசாலைச் சிறுர்களையும பயங்கரவாதிகளாக்கிப் படுகொலை செய்துவிட்டுப் ''புத்தம் சரணம் கச்சாமி'' சொல்வதால் பிரயோசனமுமில்லை.

அண்மையில் பத்திரிகைகளில் வெளியாகிய ஒரு சில அமைச்சர்களினதும், அரசியல் வாதிகளினதும் கூற்றுக்களில், இன்றைய பிரச்சனைக்களுக்கான உண்மைக் காரணங்கள் அவர்கள் நெஞ்சங்களை உறுத்துவது தெரிகிறது. ஆனல் இவர்களின் கூற்றுக்களில் இடம் பெற்றுள்ள உணர்வுகள் உண்மையானவைகளா என்பதைக் காலம்தான் சொல்லவேண்டும்.

அக்கிரமக்காரர்களின் அழிவிற்கான காலவெல்லைதான் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருக்கிறதே தவிர, ஆட்சியில் அவர்கள் என்றும் நிலைத்ததுமில்லை. நீடித்து இருந்ததும் இல்லை.

இந்நாட்டின் ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் இதனை நினைவில் நிறுத்தவேண்டும். இதுவரை காலமும் செய்த பாவங்களுக்கு இனியாவது பிராயச்சித்தம் தேட முயற்சிக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் குறைபாடுகளையும் அதி உத்தமர் அறி

( 6 ம் பக்கம் பார்க்க )

# இதயமற்றவர்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்காமல் இறைவனின் தீர்ப்புக்கு விட்டுவிடுவோம்

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டின் அரசினல் இயற்றபபட்ட கடற்கண்காணிப்பு வலயச் சட்டத்தினல் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மீனவர்கள் தொழில் இழந்தார்கள். அன்றில் இருந்து இன்றுவரை, படிப்படியாகப் பட்டினிச் சாவை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிருர்கள்.

தீவுப் பகுதி மக்களும், இச்சட்டம் இயற்றப்பட்ட நாள் முதல், பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகிவருகிருர்கள். கடற்போக்குவரத்தைக் கண்காணித்துவரும் கடற்படையினரின் வெறியாட்டங்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இரையாகி வருகின்றனர். 'குமுதினி' ப் படகில் நடைபெற்ற கோரக்கொலைகளும், மண்டைதீவுக் கரையில இடம் பெற்ற கரையூர் மீனவர்களின் படுகொலைகளும் இன் பின்னணியிலேதான் நடைபெற்றன. இத்தகைய பாதிப்புகளும் படுகொலைகளும் தொடர்கதையாய் தொடர்ந்துகொண்டிருக்கின்றன

அடுத்து அரசால் அமுலாக்கப்பட்ட ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தால் இம்மண்ணிலுள்ள மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டு வருகின்றனர் உயிர்ப்பலிகளுக்கும், அங்கவீனங்களுக்கும், கணக்கிட முடியாத பொருட்சேதங்களுக்கும் ஆளாகி வருகின்றனர் வர்த்தகம் சீரழிந்து வருகிறது. செய்தொழில்கள் சிதைவுறுகின்றன, கல்வி உருகுலைகிறது. மக்கள் நின்மதியைப் பறிகொடுத்துவிட்டு விரக்தியின் விழிம்பிலே வந்து நிற்கிருர்கள்.

இடையிடையே அரசால் புகுத்தப்படும். போக்குவரத்து விதிமுறைகள், தடைமுகாம் சோதனைகள், அனுமதிப் பத்திர முறைமைகள் போன்றவற்ருல், மேலும் பல வேதனைகளையும் கஸ்டங்களையும் மக்கள் அனுபவித்து வருகிருர்கள். வியாபாரம் தொடர்பாகவும், வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடியும், உயர் கல்விக்காகவும். உத்தியோக நிமித்தமும், அரச படைகளின் அட்டூழியங்களில் இருந்து தப்பவும், குடாநாட்டுக்கு வெளியே போய்வரும் ஒவ்வொருவரும், தமது உடலையும் உள்ளத்தையும் வருத்தியே பிரயாணம் செய்யவேண்டியவர்களாக இருக்கின்ருர்கள். உயிரைப் பணயம் வைத்தே போய் வருகிருர்கள்.


லொறிப் போக்குவரத்துச் சேவையாளர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் தொல்லைகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. பயங்கர அனுபவங்களுக்கு அவர்களை ஆளாககுகின்றன. இனவெறியர்களின் பசிக்கு அடிக்கடி இரையாகி வருபவர்களும் அவர்கள்தான்.

(6 ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் சேவை

வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பிற்கான பாதுகாப்புச் சேவை எதிர்வரும் 5-9-86-ல் இருந்து இயங்கவுள்ளது. அமைப்புகளின் ஆலோசனைக்கமையவே இச்சேவையை யாழ் வர்த்தகர் சங்கம் உருவாக்கியுள்ளது. மாநகரசபை எல்லைக்குள் உள்ள சகல வர்த்தகர்களும் இச்சேவை திறமையுடனும், உருவாக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமையவும், இயங்க பரிபூரண ஒத்துழைப்புத் தரவேண்டும் எனப்பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வொரு வர்த்தக நிலையத்திலிருந்தும் ரூபா: 25 - சேவைக்கட்டணமாக அறவிடப்படும். இச்சேவை தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் இம்மாத இறுதிக்குள் மாநகரசபை எல்லைக்குளுள்ள சகல வர்த்தக நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படும். அவற்றைப் பூரணப்படுத்தி, காலதாமதமின்றி சங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை கேட்டுக் கொள்கிருேம்.



ஆசிரியர் : (மாணவிகளைப் பார்த்து) ''பயங்கர வாதம் என்ற சொல்லிற்கு யாராவது ஒருவர் விளக்சம் சொல்லுங்கள்.''

மாணவி : 'சில அமைச்சர்களைப் பீடித்துள்ள பயங்கர வாத நோய் சேர்!''

# வாழ்க ! வளர்க !! என வாழ்த்துகிருர்கள்

### மாவட்ட செயலாளரும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபருமான
## உயர்திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்களின் வாழ்த்துரை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பணப் புழக்கத்திற்கும் முக்கிய பங்களிப்பவர்கள் வர்த்தகர்களே. வளரும் நாடான எமது நாட்டில் வர்த்தகர்கள் ஒரு தனி இடத்தினை வகிக்கிருர்கள். குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக எமது நாட்டில், அதுவும் விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், பல்வேறு அசாதாரண சூழ்நிலைகளால் மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிப்பு அடைந்து வந்துள்ளது. யாழ்ப்பாண வர்த்தகர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும், வாடிக்கையாளரின் திருப்தியே தமது இலட்சியம் என்ற பெரு நோக்குடன் யாழ்ப்பாணவர்த்தகர்கள் இதுகாறும் செயற்பட்டு வந்துள்ளமையை நான் பாராட்டுகிறேன்.

யாழ் வர்த்தக சங்கத்தினர் தமது கொள்கைகளையும் செயற்பாடுகளையும் பொது மக்களுக்கு அறியத்தரும் நோக்குடன் "வர்த்தகன்" என்னும் மாதாந்தப் பத்திரிகை ஒன்றினை வெளியிடுவது பொது மக்கள் வர்த்தகர்களை நன்கு புரிந்துகொள்ளப் பெரிதும் உதவும். இப்பத்திரிகையில் வர்த்தகர்கள் மட்டும் அன்றி பொது மக்களும் தமது கருத்துக்களை வெளியிட இடமளிப்பின் அது நாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதோடு மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும், இடையிலான பிணைப்பினை மேலும் வலிதாக்கும் என்பது எனது நம்பிக்கை.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இத்தகைய பத்திரிகை மிக அவசியமானதொரு தேவையாகும்.

ஆகவே "வர்த்தகன்" நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியுற வாழ்த்துகிறேன்.

## ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களின் ஆசியுரை

தங்கள் சங்கத்தினது கொள்கைகளையும், செயற்பாடுகளையும் வர்த்தகப் பெருமக்களும் பொதுமக்களும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக 'வர்த்தகன்'' ஒன்ற பெயரில் தாங்கள் ஒரு மாதாந்தப் பத்திரிகையை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்ருேம்.

வணிகப் பெருமக்களின் அமைப்பு என்ற முறையில் யாழ் வர்த்தக சங்கம் இன்றைய சூழ்நிலையில் பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளது என்பதையும், அதிக இலாபத்தைக் கருதாது வர்த்தகம் செய்வதன் மூலம் விலைவாசியை அதிகரிக்காமல் "சிறிய இலாபம் - பெரிய வியாபாரம்" என்ற அடிப்படையில் வர்த்தகர்கள் செயல்படக் கூடியவாறு தங்களுடைய வர்த்தகக் கொள்கைகள் அமையுமேயானல் அது பாவனையாளருக்கும், பொதுமக்களுக்கும் வசதியாக இருக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிருேம்

தற்போது இருக்கும் சூழ்நிலையிலும் மக்களின் தேவைகளை சேவை மனப்பான்மையுடன் பூர்த்திசெய்யும் வர்த்தகப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், தங்களது முயற்சி தொழில் ரீதியாக வரவேற்கப்பட வேண்டியதுடன், பாராட்டப்படக்கூடியது என்பதையும் குறிப்பிட்டு, இம் முயற்சிகளுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

## "வர்த்தகன்"
## ஒற்றுமையின் தூதுவன் என வாழ்த்துகிருர்
## விக்ரர் அன் சன்ஸ் உரிமையாளர்
## திரு. விக்ரர் இம்மனுவல்

எறும்புகள் கூட்டமொன்று ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீரைக் கடந்து எதிர்க்கரைக்கு போக முடியாமல் தத்தளித்தது. ஈற்றில் தங்களின் ஒற்றுமையைப் பயன்படுத்தி ஒன்றன்மேல் ஒன்ருகப் பந்து போல் சேர்ந்து திரண்டு ஆற்றின் மேல் மிதந்து, அக்கரை போய்ச் சேர்ந்தன. இதே போன்று. இன்றைய பயங்கரமான சூழ் நிலையில், வர்த்தகர்களாகிய நாங்களும் ஒற்றுமைப்பட்டாலே எதையும் சாதிக்கலாம் என்பதை உணர்வோமாக.

வர்த்தகர்களிற்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தச் சங்கம் 'வர்த்தகனை'த் தூதுவனுக்க வேண்டும். மாதவெளியீடாக வெளிவரும் வர்த்தகன், ஒற்றுமையின் சின்னமாக வளர்ந்து விரைவில் வார வெளியீடாக வெளிவரவேண்டும். என வாழ்த்துகிறேன்.

## முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தி

ஆரம்பித்திருக்கும் இந்நன் முயற்சி இந்நேரத்தில் மிக அவசியமானதாக இருக்கிறது. இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் எந்நேரம் எது நடக்கும் என மக்களால் தீர்மானிக்க முடியாமல் நிம்மதியிழந்து தவிக்கும் இந் நேரத்தில்;

மனிதனுக்கு அவனது எல்லா நிலையிலுமான அடிமைத்தனத்திலிருந்தும் முற்ருக அவன் விடுதலை பெறுவதற்குத் தேவையான அடிப்படையான 'சிந்தனை' உதயமாவதற்கும் அதிலிருந்து தெளிவாகும் விடுதலைப்பாதையில் வீறுநடை போடுவதற்கும் அத்தியாவசியத் தேவையாகவுள்ள சக்திகளுக்குரிய காரணிகளைப் பெற்றுக் கொள்ள, அவனுக்குத் தேவையானதை வழங்குவதற்குள்ள வர்த்தக நிலையங்களின் கூட்டமைப்பான அதன் சங்கம் எடுத்திருக்கம் ஆக்கமான 'வர்த்தகன்' எனும் இம் முயற்சி வெற்றியளிக்க வாழ்த்துகிருேம்.

இந்நன் மூயற்சியின் முலம் பெறும் சகல நன்மைகளும் பொதுமக்களாகிய நமக்கே என்றிருக்குமாகின், நாம் ஒவ்வொருவரும் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் இப்பத்திரிகைக்கு வழங்க வேண்டுமென அன்பாகக் கேட்டுக்கொள்கிருேம்.

நன்றி.

### நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள் அருளுரை

மெய்யன்பர்களே:

யாழ்; வர்த்தகர் சங்கம் வர்த்தகன் என்ற தலையங்கம் கொடுத்து ஒரு மாதாந்தப் பத்திரிகையினை வெளியிடவுளதறிந்து மகிழ்ச்சியடைகின்ருேம். வர்த்தகர் இல்லாத தேசமும் இல்லை வர்த்தகர் இல்லாது வாழ்வும் இல்லை, மக்களுக்கு சேவை புரிபவர் மகேசனுக்குச் சேவை புரிபவர்களாகிருர்கள் பலாபலன்களெல்லாம் பகவானுக்கே அற்பணம் என்று உன் கடமையைச் சரிவரச்செய் எனப் புகட்டுவது பகவத்கிதை; நேர்மையான முறையில் வர்த்தகம் செயவோர் தெய்வம் தொழுவார்களாகிருர்கள் மேலும் இச்சஞ்சிகையில் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றும் வகையில் கதைகள் கட்டுரைகள் இடம் பெறுமாகில் மெச்சப்பாலதாகும்.

இப்பத்திரிகை மேன்மேலும் சிறப்புற வளர வேண்டுமென பெம்மான் பொற்பாதங்களைச் சிந்தித்து எமது நல்லாசிகளை வழங்குகிருேம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

## "சிரித்திரன்" ஆசிரியர் திரு. சி. சிவஞானசுந்தரம் அவர்களின் இதயபூர்வமான வாழ்த்துக்கள்

இராவணேஸ்வரனுக்கு பத்து முகங்கள்.

யாழ்ப்பாணத்திற்கு ஆறு துறைமுகங்கள் சூழ உள்ள திருநாடு யாாழ்ப்பாணம்.

கலாச்சாரத்திலும் இலக்கியத்திலும் ஆன்ம நெறியிலும் உயர்வு கண்டது போல் வாணிபத்திலும் வான்புகழ் கண்டவர்கள் நம்மவர்கள் திரைகடலோடியும் திரவியம் குவித்து எமது முகங்களும், துறைமுகங்களும் மலர்ந்திருந்த காலமோர் காலம்.

ஆங்கிலேயன் ஆட்சியில் கப்பலோட்டிய தமிழன் அரசாங்க அலுவலகங்களில் பேனு ஓட்டியாக மாறினுன். எமது பொருளாதாரமும் நீண்ட காலப் மாத ஊதியத்தில் ஊசலாடிக்கொண்டிருந்து விட்டது.

காலம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது எமது மண் சுபீட்சம் காணும் காலத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது.

"வர்த்தகனும்" விடிவெள்ளியாகப் பூத்துவிட்டான்.

'வர்த்தகன்' எமது பொருளாாதர பொற்கபாடத்தின் திறவுகோலாக வாழ்வானெனச் சிரித்திரன் வாழ்த்துகிருன்.

## விலைகளில் கட்டுப்பாடற்ற நிலையும் பொருட்களின் தட்டுப்பாடும் எதனுல்?

(பொருளாளர் திரு. இ. கணேசமூர்த்தி'

எம்மக்களின் நாளாந்தப் பாவனைப் பொருட்கள் சில சமயங்கள் தட்டுப்பாடாக இருப்பதற்கும், விலைகளில் கட்டுப்பாடற்ற நிலை நிலவுவதற்கும், சில பொருட்களின் விலை இடையிடையே அதிகரிக்கப்படுவதற்கும் காரணம் என்ன என்பதை நாம் மக்களுக்கு விளங்கப்படுத்தி இவற்றிற்கு நிவாரணம் காண சங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. என்பதையும் தெரியப்படுத்த விரும்புகிருேம்.

தட்டுப்பாட்டிற்கும், விலையேற்றத்திற்கும் முக்கியகா

5ம் பக்கம் பார்க்க

## வர்தகர்களின் உணர்வுகளுக்கு மக்கள் மதிப்பளிக்கவேண்டும்

வர்த்தகன் என்ருல் .வசதி படைத்த முதலாளி வரக்கத்தினன் என்ற தவருன சிந்தனையை ஒரு சிலர் மக்கள் மத்தியில் விதைத்ததன் விளைவாக அவனின் உடமைகள் கொள்ளை போகும்போதோ அல்லது வேறுவித பாதிப்புகளுக்கு இலக்காகும்போதோ, அவனுக்காக அனுதாபப்படுபவர்கள் மிகச்சிலரே. உள்ளவன் தானே, கொள்ளை கொடுத்ததால் என்ன குறைந்தா போய்விடுவான் என்ற எண்ணந்தான் பலரிடம் மேலோங்கி நிற்கிறது.

ஒரு காலத்தில் வர்த்தகர்களில் சிலர் அப்படி வாழ்ந்திருக்கலாம். ஆனல் இன்றைய சூழ்நிலையில் அப்படியானவர்கள் மிக மிகக் குறைவானவர்களே. அவர்கள்கூட இன்று இங்கு இல்லை. இருந்ததை எல்லாம் எடுத்துக்கொண்டு

(5ம் பக்கம் பார்க்க)

# எண்ணம்

**வணக்கம் !**

விடுதலை என்றவிடிவை நோக்கி நம்மவர்கள் விரைந்து கொண்டிருக்கும் வேளையில்தான் "வர்த்தகனும்" பிறந்திருக்கிறுன்.

இவன் யாழ் வர்த்தகர் சங்கத்தின் வாரிசு. தமிழ் பேசும் வர்த்தகர்களின் செல்லப்பிள்ளை.

உண்மை, நேர்மை, நடுநிலமை, அஞ்சாமை இவைதான் இவன் கருவானபோது உருவான உயர்ந்த கொள்கைகள்—உன்னதமான குறிக்கோள்கள்.

ஈழவர்களின் ஓர் அங்கமான வர்த்தகர்களின் எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை, அவர்கள் எதிர்கொள்ளும் அன்ருடப் பிரச்சனைகளை. அவற்றின் தாக்கங்களை, மக்கள்முன் வைக்கும் பணியை இவன்தான் செய்யப்போகிருன்.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலையங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டு அல்லும் பகலும் அவதியுறும் வர்த்தகர்களின் அவலநிலையையும், இவ் வெல்லைகளுக்கு வெளியே இருக்கின்ற வர்த்தகர்களின் இன்னல்களையும், எம்மவர்க்கும் ஏனையோருக்கும் இவனே எடுத்துச் சொல்லப்போகிருன்.

சங்கத்தின் கொள்கைகளையும், நோக்கங்களையும், செயற்பாடுகளையும் சகலரும் அறிந்துகொள்ள வழிவகுக்கும் அதேவேளையில், சிதறிக்கிடக்கின்ற வர்த்தகர்களின் சித்தனையைத் தூண்டி, ஒரே அணியின்கீழ் வர்த்தகர்கள் அனைவரும் அணிதிரளவேண்டியதன் அவசரத்தையும் அவசியத்தையும் இவன் வலியுறுத்துவான்.

வர்த்தகர்களும் இம்மண்ணின் மைந்தர்கள் தான், ஏனையவர்களைப்போல் அவர்களுக்கும் இனப்பற்று, மொழிப்பற்று, விடுதலைவேட்கை தன்மான உணர்வு ஆகியன உண்டு, எனக் குரல் கொடுக்கப்போவதும் இவன்தான்.

இவன் கருத்துச் சுதந்திரத்தில் கர்ணனுக இருப்பான். கள்ளச் சந்தைக்காரருக்கும், பதுக்கல் பேர்வழிகளுக்கும், கொள்ளை இலாபக்காரருக்கும், இவன் சிம்மசொற்பனமாகத் திகழ்வான். கடத்தல்களையும், கொள்ளைகளையும், காரணமற்ற மிரட்டல்களையும் கண்டிக்கத் தயங்கமாட்டான்.

அடக்கு முறைக்கும், சந்தற்பவாதத்திற்கும் தலைகுனியும் எண்ணம் "வர்த்தகனுக்குத்" துளியும் கிடையாது. இலட்சியப்பாதையே இவன் வழி. தனக்கென வகுத்திருக்கும் தனி வழி.

சுருங்கச் சொன்னல், வர்த்தகர்களின் நல்வாழ்வுக்கு 'வர்த்தகன்' ஒரு வழிகாட்டியாக அமைவான்.

'வர்த்தகனை' எல்லோரும் வாழ்த்துங்கள், அவன் வளர்ச்சியில் சகலரும் அக்கறை காட்டுங்கள்.

நன்றி.

## ஊற்றெடுக்கும் "ஊற்று அமைப்பு"

( தலைவர் : ஏ. கே. நடராசா )

"யாழ் வர்த்தகர் சங்க ஆட்சிக்குழுவை நாம் சந்திக்க விரும்புகிறோம். எதிர்வரும் 30-7-86 அன்று மாலை 3-00 மணிக்கு உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்போம்." ஊற்று அமைப்பு சங்கத்திற்கு விடுத்த அழைப்பின் சாராம்சம் இது. அழைத்ததன் நோக்கத்தை அழைப்பிதழ் தெளிவுபடுத்தாவிட்டாலும், ஆக்கபூர்வமான பல பணிகளில் ஈடுபட்டிருக்கும் இவ்வமைப்பு, ஏதோ ஒரு நல்ல நோக்கத்துடன்தான் எம்மை அழைத்திருக்கிறது என்ற எண்ணம் அங்கு எம்மைச் செல்லவைத்தது. (தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அரச கூலிப் படைகளினுல் ஆலயங்கள் அழிகின்றன

புத்தமதம் இந்நாட்டின் அரசமதமாக இருக்கும் அதே வேளையில், பிற மதத்தவர்களின் மதவழிபாட்டுச் சுதந்திரமும் அரசியலமைப்பில் வலியுறுத்தப் பட்டிருப்பதாகப் பிரச்சாரம் செய்துவரும் அரசு தனது படையினரைக் கொண்டு, மற்றய மதத்தினரின் மதவழிபாட்டுத் தலங்களை அழித்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

தாக்குதல்களின் போது தவிர்க்க முடியாமல் சேதப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு சேதப்படுத்தப் பட்ட மதவழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கையோடு செல்வச்சந்நிதியும் அண்மையில் சேர்ந்து கொண்டது.

இப்போது வேண்டுமென்றே திட்டமிட்டு மதவழிபாட்டுத் தலங்களை அழிக்கும் பணியில் அரசபடையினர் இறங்கியுள்ளார்கள் என்பதற்கு சிலநாட்களுக்கு முன்னர், குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட மண்டைதீவு புனித அந்தோனியார் கோவில் சாட்சிபகர்கிறது.

மத அழிப்புத் தொடரப் போவதற்கு இச்சம்பவம் ஓர் அபாய அறிவிப்பா?

( 6 ம் பக்கம் பார்க்க )

## யாழ் வர்த்தகர் சங்க இணக்க சபை

வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தகர்களுக்கு இடையேயான சகலவிதமான பிணக்குகளையும் சமரசமாகவும் நீதியான முறையிலும் தீர்த்து வைக்கவேண்டும். என்ற நல்லெண்ணத்துடன் "யாழ் வர்த்தகர் சங்க இணக்கசபை" என்ற பெயரில் ஓர் இணக்க சபையை உருவாக்கியுள்ளோம்.

வர்த்தகர்களுடைய பிரச்சனைகளை வர்த்தகர்களே நன்கு அறிவார்கள். அனுபவரீதியாக உணர்வார்கள். ஆகவே தான் பல்வேறு வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கிய இந்த இணக்க

( 6 ம் பக்கம் பார்க்க )

## அமைப்புகள் பங்குகொண்ட ஆலோசனைச் கூட்டம்

கடந்த 3-8-86 - ல், கடத்தல் கொள்ளை ஆகியவை பற்றிக் கலந்தாலோசித்து, ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, சங்கத்தால் ஓர் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது.

இவ்வாறு ஆலோசனைக் கூட்டத்தில், எமது ஆட்சிக்குழு உறுப்பினர்களும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், ஈழப் புரட்சிகர அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளும், முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியம், வடபிராந்திய போக்குவரத்துச் சங்கம் ஆகிய போக்குவரத்துச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்,

பரவலாகவும் விரிவாகவும் பயன்மிகு கருத்துக்கள், பங்கு கொண்ட பலரால், இக்கூட்டத்தின் போது பரிமாறப்பட்டன. பின்வரும் விடையங்களில் தம்மால் இயன்றளவு உதவுவதாக அமைப்புக்கள் வர்த்தகத்துறைச் சங்கங்களுக்கு வாக்குறுதியளித்தன.

1. வாகனக்கடத்தல்: வாகனக் கடத்தல்கள் நடைபெருதிருக்க கூடுமானவரை தாம் ஒத்துழைப்பு நல்குவதாகவும் வாகனக் கடத்தல்கள் தொடர்பாக முறையீடுகள் செய்யும் போது முடியுமான வரை கடத்தியவர்கள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடும்படியும் அமைப்புகள் தெரிவித்தன.

2. கொள்ளைகள்: வர்த்தக நிலையங்களில் நடைபெறும் கொள்ளைகளைத் தடுக்க, உள்ளூர் பாதுகாப்புச் சேவை ஒன்றினை வர்த்தக சங்கம் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும் என ஆலோசனை தெரிவித்த அமைப்புகள், இப் பாதுகாப்புச் சேவைக்கும் தாம் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தருவதாக வாக்குறுதியும் அளித்தன.

3. முறையீடுகள்: வர்த்தகர்களின் முறையீடுகள் அனைத்தும் யாழ் வர்த்தகர் சங்கத்திற்கூடாகவே செய்யப்பட வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை அமைப்புகள் ஏற்றுக்கொண்டன.

ஆட்கடத்தல்கள் நடைபெறுவதற்கான காரணகாரியங்களை ஆதார பூர்வமான முறையில் விரிவாக விளக்கிய அமைப்புகள், கடத்தப்படுபவர்கள் கண்ணியத்துடனும் உண்மையுடனும், நேர்மையுடனும் நடந்து கொண்டிருப்பார்களேயானல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதற்கு அவசியமே ஏற்படாது என்ற கருத்தையும் வலியுறுத்தத் தவறவில்லை.

வர்த்தகர்கள் அனைவரும் ஒரே அமைப்பின் கீழ் வர வேண்டியதன் அவசியமும் இக்கூட்டத்தில் வற்புறுத்தப் பட்டது.

## வர்த்தகர்களும் - பொதுமக்களும்

நிருவாக உதவியாளர் ; ( இரு. த அருமைநாயகம் )

நம் நாட்டில் கல்வியின் மகத்துவம் உணரப்பட்ட நாள் முதல், பல்வேறு துறைகள் தொடர்பாக விதம்விதமான நூல்களும் பிரசுரங்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனுல் வர்த்தகத்துறையைப் பொறுத்த வரை தரமான வெளியீடுகள் மிகக் குறைவானவையே. அதுவும் தமிழில் வெளியாகின்றவை மிக மிகக் குறைவானவை, இந்நிலையில் "வர்த்தகன்" வெளியாவது வரவேற்கத்தக்க, வாயார வாழ்த்த வேண்டிய செயலாகும். பொதுமக்களும் வர்த்தகப் பெருமக்களும் பயனடையக் கூடிய வகையில் தரமான பல் சுவை ஆக்கங்களை உள்ளடக்கியதாக. இப்பத்திரிகை வெளிவரவேண்டும்.

'வர்த்தகன்' வர்த்தகர்களோடு தொடர்புடையவன். வர்த்தகர்கள் பொதுமக்களோடு தொடர்புடையவர்கள், இரு சாராரும் பரஸ்பரம் என்னென்னத்தை எதிர்பார்க்கிறுர்கள் என்பதை இத் தருணத்தில் நாம் எண்ணிப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

வர்த்தகத்தை மக்களுடன் தொடர்பு படுத்தும் வியாபார முறைமையாக்கியவர்கள் அராபியர்கள். மாற்றுத் தொழில்கள் பண்டமாற்றமாகி, பொதுக்குவியான பணத்தின் கண்டுபிடிப்பின் பின்னர் வாங்கி விற்கும் வர்த்தகமாக உருமாறியது. சுருங்கச் சொன்னல் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்பவரிடம் அப்பொருளை ஓர் குறிப்பிட்ட விலை கொடுத்து வாங்கி, தேவைப் படுபவருக்கு ஓர் குறித்த தொகையை இலாபமாக வைத்துக் கையளிப்பவனே வர்த்தகன். அதுவே வர்த்தகம்.

ஆரம்பகாலத்தில் வியாபார முறைகள் அக்காலத்திற்கேற்ற அமைப்பு முறைகளிலே இயங்கி வந்தன. ஆனுல் இன்ரு, பல்வேறு முறைகள் வியாபாரத்தில் புகுத்தப்பட்டு வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே ஓர் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தியுள்ளன.

வர்த்தகர்கள் பொதுமக்களின் அன்ருட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பல்தரப்பட்ட பொருட்களையும், அவரவர் ரசனைக்கும் தேவைக்குமேற்ப எளிதாகக் கிடைக்க வழிவகுப்பவர்கள். மக்களின் ஜீவநாடியாகத் திகழ்பவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் வடகீழ் மாகாணங்களில் உள்ள வர்த்தகர்கள் மக்களுக்கு ஆற்றும் பணியோ

( 5 ம் பக்கம் பார்க்க )

# சங்கம் பிறந்த கதை

(பொதுச் செயலாளர் திரு. சி. நவசிவாயம்)

ஆயிரத்தித்தொழாயிரத்தி எண்பத்தைந்தாம் ஆண்டு மார்ச் மாசம் பதினேளாம் நாள். ஆஸ்பத்திரி வீதி 110ம் இலக்கத்தில் முப்பத்தியேழு வர்த்தகர்கள் கூடி ஓர் தீர்க்கமான முடிவுக்கு வந்தோம். எமக்கென ஒரு அமைப்பு உருவாக்கப்படவேண்டும் எல்லா வர்த்தகர்களையும் ஒன்றுதிரட்டி, இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தவேண்டும் என்பதே நாம் அன்று எடுத்த முடிபு.

வர்த்தகர்கள் மத்தியில் பீதி குடியேறிய வேளையது. வர்த்தகர்கள் கட்த்தப்பட்டு பணத்திற்காகப் பணயம் வைக்கப்பட்ட காலகட்டம். சங்கத் தலைமைப் பீடத்தை உருவாக்குவதில் சங்கடங்கள் ஏற்படலாம் என ஒரு சிலர் சந்தேகம் தெரிவித்தனர். ஆனால் எவ்வித தயக்கமுமின்றி தலைமைப் பதவியை ஏற்க முன்வந்தார் திரு.எஸ்.வி. முருகேசு அவர்கள். செயலாளர் பதவியை என்னை ஏற்கும்படி பணித்த போது துணிவோடு நானும் அதனை ஏற்றேன். பொருளாளர்பதவியை காலம் சென்ற பிள்ளையார் ஸ்ரோர்ஸ் திரு. கே. இராசதுரையிடம் ஒப்படைத்தார்கள். துணைத் தலைவராகத் திருப்பதி ஸ்ரோர்ஸ் திரு. ஆ. இ. திருவாதிரை அவர்களையும், துணைச் செயலாளராக திரு. வீ. கே. குணரத்தினம் அவர்களையும், துணைப் பொருளாளராக தற்போதைய துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. ந. சுப்பிரமணியம் அவர்களையும் நியமித்தார்கள். ஆட்சிக்குழு உறுப்பினர்களாக திருவாளர் க. பரஞ்சோதி க. கோபாலபிள்ளை, செ. சிவபாதலிங்கம், க. முருகமூர்த்தி எம். ஜி. பசீர், ஞ.ஞானப்பிரகாசம், எம். கிரிதரன, ஆர்.குகன் சி. பரமசாமி, மகம்மதுபாய், த. சங்கரப்பிள்ளை, மு. ஒப்பிலாமணி, கே. கே. நடராசா, தா. செல்லத்துரை ஆகியோரைத் தந்தார்கள். சட்டத்தரணியும் முன்னாள் தொழிற்சங்கப் பிரமுகருமான திரு. த. சோமசுந்தரம் அவர்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகராக்கப்பட்டார்.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம் உருவாகியது.

கடந்த மே நான்காம் நாள் நடைபெற்ற சங்கத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டம் வரை, நாம் கடந்து வந்த பாதையில் எம்மை நெருடிய நெருஞ்சி முட்களையும், எதிர்கொண்ட எண்ணற்ற சோதனைகளையும் சகித்துக்கொண்டோம். எமது இலட்சியம் சிதைந்து விடாமல் பயணத்தைத் தொடர்ந்தோம். விளைவு சங்கம் வேகமாக வளர்ந்தது: உறுப்புரிமை பன்மடங்காகியது. யாழ் வர்த்தகர் சங்கம் என்ற பெயர் மாற்றத்தோடு, சகலரும் அங்கீகரிக்கக்கூடிய அமைப்பாக உருமாறியது.

செயலாளராகத் தொடர்ந்தும் செயற்படுங்கள் எனப் பொதுச்சபை கடந்த ஆண்டுக் கூட்டத்தின்போது மீண்டும் என்னைப் பணித்த போது நான் மறுக்கவில்லை. மனதார ஏற்றேன்: பதவியில் இருக்க வேண்டும் என்ற ஆசையால் அல்ல. பலரோடு சேர்ந்து பாசத்துடன் உருவாக்கிய சங்கம் பலம்மிக்க ஓர் அமைப்பாகும்வரை பாடுபடவேண்டும் என்ற எண்ணத்தினால் தான் பதவியைத் தொடரச் சம்மதித்தேன்.

என்னதான் பாடுபட்டாலும் உறுப்புரிமை என்ற உரமில்லாது, சங்கத்தின் வளர்ச்சி துரிதமடையாது: செயற்பாடுகளில் வலிமை இருக்காது. நீதி கேட்கலாம். நியாயம் பேசலாம். ஆனால் அநீதியைப் பணிய வைப்பதில் சிரமப்படவேண்டியதாக இருக்கும். உறுப்புரிமை உயர்ந்து சங்கம் வர்த்தகர்களின் அரணாக மாறுமானால், நியாயமான எமது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவுற வைக்கலாம். சாதனைகள் நிறைந்த சரித்திரம் படைக்கலாம்.

யாழ் மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் அனைவரும் இதனை ஆழமாகச் சிந்தித்து காலதாமதமின்றி சங்க உறுப்பினர்களாக வேண்டும். சகல பேதங்களுக்கும் அப்பாற்பட்டு சங்கத்தை வலுப்படுத்த முன்வரவேண்டும்: இது எமது சங்கம், இதனால்தான் எமக்கு விமோசனம் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும்

ஒற்றுமையை ஏற்படுத்த, உரிமைக்குரல் எழுப்ப் எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை அனைவரும் தெரிந்து கொள்ள சங்கத்திற்கு ஒரு" பத்திரிகை அவசியம் வேண்டும் என நினைத்தவர்களில் நானும் ஒருவன்.

என் நினைவு இன்று நிசமாகிறது. "வர்த்தகன்" சங்கத்தின் எண்ணங்களையும், அபிலாசைகளையும், செயற்பாடுகளையும் பிரதிபலித்து, நல்லிதயம் கொண்டவர்கள் ஆசியுடன் வெளியாகியிருக்கிறான்

சங்க இலட்சியங்களின் சங்கநாதமாக புகழ் பரப்பி சங்கத்திற்குப் பெருமை தேடித் தர வேண்டுமெனச் சகலரும் வாழ்த்துங்கள்.

## சேதங்கள் பற்றிய விபரங்கள்

அண்மைக் காலங்களில் அடிக்கடி நடைபெறும் "ஷெல்" அடிகளினாலும், ஆகாயத் தாக்குதலினாலும், வர்த்தக நிலையங்களும் உடமைகளும் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் வர்த்தகர்கள், சேதம் பற்றிய முழு விபரங்களையும் உடனடியாகச் சங்கத்திற்குத் தெரியப்படுத்தும்படி கேட்கப்படுகின்றனர். விரிவான முறையில் இவ்விபரங்கள் எமக்குத் தரப்படவேண்டும்.

# கடந்த காலத்தை நினைவு கூருங்கள் எதிர்காலத்தை ஊகிக்க முயலுங்கள்

அண்மையில் நாம் கூட்டிய ஒரு கருத்தரங்கின் போது, அதில் பங்குகொண்ட ஓர் அமைப்பின் பிரதிநிதி எம்மைப் பார்த்து ஒரு இக்கட்டான கேள்வியைக் கேட்டு வைத்தார், "யாழ் மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களில் எத்தனை பேர் உங்கள் சங்க உறுப்பினர்களாக இருக்கிறார்கள்?" இதுவே அந்தக் கேள்வி;

தர்ம சங்கடமான இந்தக் கேள்விக்குத் தக்க பதிலை நாம் சொல்வதானால் எம்மவர்களை நாமே விட்டுக் கொடுத்தவர்களாவோம். என்ற எண்ணத்தில் பதில் சொல்லாமல் தட்டிக்கழித்துவிட்டோம். ஆனால் இக் கேள்விக்குள் மறைந்திருந்த உண்மை எமக்கெல்லாம் வேம்பாகக் கசந்தது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என அன்றே சொல்லிவைத்திருக்கிறார்கள். இதை எமது வர்த்தகர்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இன்றைய நாட்டு நடப்புகளை நன்கு புரிந்துகொண்டவர்களாகவும் இல்லை. நாமுண்டு, நம் குடும்பமுண்டு, வீண்சோலி நமக்கு வேண்டாம் என்ற தோறணையில்தான் பலர் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் அடுத்தவனுக்குத்தானே, எனக்கில்லையே, அநாவசியமாக ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என நினைக்கிறார்கள்.

இவர்களின் இந்த நடைமுறைகளும் நினைவுகளும்தான், மற்றவர்கள் வர்த்தகர்களைப் பகடைக் காய்களாக்கிச் சூதாடும் பரிதாப நிலையை உருவாக்கியுள்ளன.

சந்தாப் பணத்தைச் சேமிக்க விரும்பி சங்க உறுப்புரிமை பெற விரும்பாதவர்களைவிட பலவிதமான சாட்டுக்களை சொல்லித் தப்பநினைப்பவர்கள் தான் நம்மவர்களில் அதிகம். நீட்டிய கையின் பலத்திற்கேற்ப நிறைய அள்ளிக் கொடுப்பவர்கள்கூட, நியாயமான வகையில் நாம் ஏதாவது நிதி உதவி கேட்கும் சமயங்களில் நகக்காக நழுவி விடுகிறார்கள்.

ஒவ்வொரு வர்த்தகனும் கடந்த காலங்களில் நாட்டில் நடந்தவற்றை நினைவு கூர்வதோடு, எதிர்காலம் எப்படி இருக்கும் என ஊகிக்க முயல வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாவது, வருங்காலம் வர்த்தகர்களுக்காக எதை எதை எல்லாம் மறைத்து வைத்திருக்கிறது என்பதை ஓரளவாதல் உணரக்கூடியதாகவிருக்கும்; ஓரணியின்கீழ் வர்த்தகர்கள் அனைவரும் ஏன் திரள வேண்டும் என்ற கேள்விக்கு தானாகவே விடை பிறக்கும்.

சிவில் நிருவாகம் செயலிழந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், நாமெல்லோரும் எப்படி எப்படி எல்லாம் சிரழிகிறோம், எவரெவரெல்லாம் எம்மை ஆட்டிப்படைக்கிறார்கள் என்ற உணர்வு ஒவ்வொரு வர்த்தகனுக்கும் ஏற்படுமானால், ஒற்றுமை உணர்வுக்கு ஊதுகுழல் வேண்டியதில்லை. இடைத்தரகர்கள் நுசகவேண்டியதில்லை.

சகல வர்த்தகர்களும் ஒரே தலைமையின் கீழ் திரண்டு ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலம் ஓர் பலமிக்க அமைப்பு உருவாக்கப்படுகிறது. வர்த்தகர்களின் பலத்தை மற்றவர்களுக்கு உணரவைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஓர் வரையறைக்குள் வர்த்தகர்கள் இயங்கக்கூடிய வசதியும் தொடர்கதையாக தற்போது தொடர்கின்ற தொல்லைகளிலிருந்து ஓர் திருப்பமும் பிறக்கிறது

இந்த எண்ணங்களின் அடிப்படையில்தான் யாழ் வர்த்தகர் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறதே தவிர தலைமைப் பதவிக்காகவோ அல்லது தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்காகவோவல்ல.

இன்று வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு பரிகாரம்காணச் சங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளும் வெற்றி பெறவேண்டுமானால், வர்த்தகர்கள் அனைவரும் சங்க உறுப்பினர்களாகி தமது ஏகோபித்த ஆதரவை எமக்கு வழங்க வேண்டும். சங்கம் எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்பட்டு அதனைச் செயற்படுத்த முன்னிற்க வேண்டும்

அப்போதுதான் இம்மண்ணிலுள்ள வர்த்தகர்கள் அனைவருக்கும் விடிவு ஏற்படும்.

சிந்திக்க ஓர் துளிக்கதை

# ★ ★ மனச்சாட்சி ★ ★

(வே. குமரகுரு)

ஓர் நாள்காலை ஒன்பதுமணி

அ. மு. க. அன் சன்ஸின் உரிமையாளர் அழகப்பர் அவசர அவசரமாக, காலையில் திறந்த தனது கடையை மீண்டும் பூட்டுவதில் முனைந்திருந்தார்.

இதனை அவ்வேளையில் தன் கடையைத் திறக்கவென வந்த எதிர்க்கடை ஏகாம்பரம் அவதானித்தார். அழகப்பரின் பரபரப்புக்குக் காரணம் புரியாமல் விழித்தார். வீதியைக் கடந்து வந்து அழகப்பரிடம் கேட்டார், "ஏனண்ணை, திறந்தகையோடு கடையைப் பூட்டுறியள்"

"பெடியள் பூட்டச் சொல்லிப்போட்டுப் போறான்கள்."

"அப்பிடியே, அப்ப நானும் திரும்பிப் போவம்."

எங்கோ குண்டுவெடித்து எதிரொலித்தது. இருவரும் படி இறங்கினார்கள். ஊர்ப் புதினங்களை அலசிக்கொண்டு பஸ் ஸராண்டு வரை வந்து பின்னர் திசைக்கொருவராகப் பிரிந்தனர்;

அடுத்தநாள் பத்திரிகைகளில் நகரத்தின் வர்த்தகநிலையங்கள் அனைத்தும் பூரண கடையடைப்புச் செய்த விபரம் வெளியாகியது.

இச்சம்பவம் நடைபெற்ற நான்காம்நாள் நகரத்தின் பிரபல வர்த்தகர்கள் நால்வர் கடத்தப்பட்டனர். இரு கடைகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பாதிக்கப்பட்டவர்களின் கடைகளில் பணியாற்றிய ஊழியர்கள் ஒவ்வொரு கடையாக ஏறியிறங்கி "நாளைக்குக் கடையெல்லாம் பூட்டி இதுக்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கவேணும்" எனக்கோரிக்கை விடுத்தார்கள். ஆம் எனத் தலையாட்டியவர்களில் அழகப்பரும் ஒருவர்.

அடுத்தநாள் காலை கையில் திறப்போடு தன் கடைக்கு வந்த அழகப்பர், கடையைத் திறக்குமுன் எதிர்ப்பக்கம் ஒரு முறை நோட்டம் விட்டார். ஏகாம்பரம் அரைக்கதவில் இருந்தார். அழகப்பரின் மனச்சாட்சி உறுத்தியது. திறப்பைப் போட்டுக் கதவைத் திறந்தவர் ஒரு கதவோடு நிறுத்திக்கொண்டு உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்.

"ஆட்கடத்தல்களையும் கொள்ளைகளையும் கண்டித்து நகரத்திலுள்ள வர்த்தகர்களில் பலர் ஒற்றைக் கதவில் வியாபாரம் செய்தனர்" என்ற செய்தி இதற்கு அடுத்தநாள் வெளியான பத்திரிகைகளின் முன் பக்கத்தில் இடம் பெற்றது.

(யாவும் கற்பனை)

## ஆக்கங்கள்

எதிர்வரும் செப்டம்பர் மத்தியில் அடுத்த இதழ் வெளிவரவுள்ளது. அவ்விதழுக்கான ஆக்கங்களைத் தந்துதவ விரும்பும்உறுப்பினர்கள் செப்டம்பர் 10-ம் தேதிக்குமுன் கிடைக்கக் கூடியதாகச் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## வர்த்தகர்களும் . . .

மகத்தானது. அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்கும், அரசபடைகளின் அராஜகத்திற்கும் மத்தியில், சொல்லொணுக் கஸ்டங்களுக்கிடையே, மக்கள் பசியாலும் பட்டிணியாலும் பரிதவிக்கவிடாமல், தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தருவித்து விநியோகித்து வருவது ஒரு மகத்தான சாதனை அல்லவா.

இன்றய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஒரு சில வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதாகக் குறைப்படுபவர்களும் நம்மத்தியில் இல்லாமலில்லை. எல்லா வர்த்தகர்களும் நாணயமாக நடக்கிறுர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், பெரும்பான்மையானவர்கள் பொதுநலத்துடன் நடந்துகொள்கிறுர்கள் என்பதை மறுக்கமுடியாது. பிற ஊர்களில் இருந்து, குறிப்பாகச் சிங்களப் பிரதேசங்களில் இருந்து, கொண்டுவரப்படும் பொருட்களுக்கு, வழி தெருவில் வசூலிக்கப்படும் பல்வேறு விதமான கட்டணங்களாலும், போக்குவரத்துச் செலவு அதிகரிப்பிஞலும், உள்ளூர் வசூல்களிஞலும் சில பொருட்களின் விலைகளை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் வர்த்தகர்களுக்கு உண்டு. இது கொள்ளை இலாபமாகாது. ஆதேசமயம், மேற்சொன்ன செலவினங்கள் இன்றி இலகுவாகத் தருவிக்கப்பட்ட ஓர் பொருளை அதிக இலாபம் வைத்து விற்பவர்கள் கண்டிக்கப்படவேண்டியவர்கள்தான்.

யாழ் வர்த்தகர் சங்கம், காலததிற்குககாலம் கொள்ளை இலாபத்திலும் பதுக்கலிலும் ஈடுபடடவேணடாம் என வர்த்தகாகளுககு வேணடுகோள விடுதது வந்திருககிறது. பொருடகளின விலைகளிலும் விநயோகத்திலும் சீரான ஓா நிலயையை ஏறபடுத்த சகல நடவடிக்கைககளேயும எடுத்துவருகறது. பொதுமககள இவ்வடயத்தில் பூரண ஒத்துழைப்பு நலகி, பதுககலிலும், கொளளை இலாபத்திலும ஈடுபடுபவர்களைப் பற்றிய விபரங்களை சங்கத்தின கவனத்துககுக் கொண்டுவருவார்களேயாஞல், சங்கம ஏற்ற நடவடிககைகளை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை தேர்ந்தெடுக்கப்பட்ட வர்த்தகர் குழு ஒன்றின் மூலம் தருவித்து, நியாயமானதும் ஒரே சீரானதுமான விலையில் விற்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் மேற்சொன்ன குறைபாடுகளை நீக்கலாம். யாழ் வர்த்தகர் சங்கம் இவ்வாலோசனையைப் பரிசீலனை செய்யவேண்டும்.

வாழ்க யாழ் வர்த்தகர் சங்கம். வளர்க 'வர்த்தகனின்' பணி.

# நாம் சாதித்தவை

சங்கத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டம் முடிந்து ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு மேலாகின்றன. இந்த மூன்று மாதகால இடைவெளிக்குள் சங்கம் சாதித்தவற்றை ஒருமுறை திரும்பிப் பார்க்கிறோம். அபாரமான சாதனை எனக் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு எதுவும் இல்லாவிட்டாலும், ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்ட திருப்தி எமக்கு ஏற்படுகிறது.

புதிய ஆட்சிக்குழுப் பொறுப்பை நாம் ஏற்ற கையோடு, யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள, பொ. சோமசுந்தரம் கம்பனி, அசோசியேட்டட் மோட்டோர்ஸ் அன் எலற்றிக்கல்ஸ், நஷனல் மோட்டோர்ஸ் ஆகிய நிறுவனங்கள் பூட்டப்பட்டிருந்தது தொடர்பான முறையீடுபற்றி ஆலோசித்துஏற்றநடவடிக்கைகளை எடுக்கவேண்டிய பொறுப்பு எமக்குத் தரப்பட்டது. அமைப்புடன் தொடர்பான இவ்விடையத்தை அவதானத்துடனும் பொறுப்புடனும் நாம் கையாண்டு சமரசமாகத் தீர்த்து வைத்தோம்.

இந்தப்பிரச்சனையை தீர்த்து வைப்பதில் திவிரமாக ஈடுபட்டிருந்த வேளையில் தான் யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள ராசம் மோட்டோர்ஸ் உரிமையாளரின் தம்பியார் மிருகத்தனமாக குறித்த வியாபார நிலையத்தின் முன் வைத்துத் தாக்கப்பட்டது சம்பந்தமான

(6 ம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர்களின் ..

இம்மண்ணைவிட்டுப் போய் விட்டார்கள். எஞ்சி இருப்பவர்கள், இருக்கும்வரை இம் மண்ணிலேயே வாழ்ந்து மடிந்துபோகவேண்டும் என நினைப்பவர்கள். மக்களோடு மக்களாக வாழ்பவர்கள். இவர்களை முதல்விட்டுத் தாம் செய்யும் தொழிலின் ஆளுநர்கள் எனச் சொல்லலாமே தவிர முதலாளி வர்க்கத்தினர் எனச் சொல்லமுடியாது. அப்படிச் சொல்வதஞல் உண்மையான முதலாளிவர்க்கத்தையே நாம் அவமானப்படுத்துபவர்களாவோம்.

குறுக்குவழிகளிலும், கள்ளக் சடத்தலாலும், பதுக்கல் வியாபார மூலமும் பல இலட்சங்களைத் தேடி, படாடோபத்தோடு வாழ்ந்த பலர் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள். அதே சமயம் சிறுக்கச் சிறுக்கச் சேமித்து தம தொழிலைப் பெருக்கியவர்கள், சேர்த்து வைததனதயெல்லாம் ஏற்பட்ட மாற்றங்கழுக்கு இரை கொடுத்துவிட்டு கடனிலும, ஈட்டிலும் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறுர்கள். வருமானத்தில் பாதிக்குமேல் வட்டியாகச் செலுத்திக் கொண்டிருக்கிறுர்கள்.

வர்த்தகத்தைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்ததற்காக வர்த்தகர்கள் ஏனையவர்களிலிருந்து மாறுபட்டவர்களல்ல ஏனையவர்களுக்குள்ள உணர்வுகளும் ஆசாபாசங்களும் இவர்களுக்கும் உண்டு.

விவசாய மூலம் தேடிய சொத்துப் பறிபோகும்போது காட்டப்படும் வெறுப்பு, வெளிநாட்டில் உழைத்த பணம் களவாடப்படும்போது தெரிவிக்கப்படும் அனுதாபம், வர்த்தகனின் உடமைகள் சூறையாடும்போது வெளிவருவதில்லை. காரணம் வர்த்தகர்களைப் பற்றிய தவருன கண்ணேட்டம் தான்.

இந்தநிலை மாறவேண்டும். வர்த்தகர்களின் உண்மையான நிலையை உணர்ந்து, அவர்களின் உணர்வுகளுக்கு மக்கள் மதிப்பளிக்கவேண்டும். அல்லல்படும்போது அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். ஒவ்வொரு வர்த்தகனும் இதைத்தான் இன்று மக்களிடம் எதிர்பார்க்கின்றுன்.

## சட்டத்தரணி திரு. த. சோமசுந்தரம் அவர்களின் வாழ்த்துரை

யாழ் வர்த்தகர் சங்கத்தின் தோற்றமும் குறுகிய காலத்தில் அதன் வளர்ச்சியும் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கத்தின் வளர்ச்சியில் முதற் படிக்கல்லாக அது "வர்த்தகன்" என்ற மாத சஞ்சிகையை வெளியிட முற்பட்டுள்ளது உண்மையில் பெரிதும் வரவேற்கத்தக்கதே. இன்றைய கால கட்டத்தில் அவசியமாகவர்த்தகத் தொழிலில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை குறிப்பாக பாவனையாளருக்கும் பரவலாக தமிழ் மக்களுக்கும் உண்மை நிலையை உடனுக்குடன் வெளிப்படுத்துவதற்கு வர்த்தகன் சஞ்சிகை பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஒரு சங்கம் கட்டுக்கோப்பாக செயல்பட அதன் குரல் எழுத்து வடிவில் வரவேண்டும். அப்பொழுது தான் சங்கம் சீராக செயல்படும்.

யாழ் வர்த்தகர்சங்கம் இன்னும் பல வகையிலும் செழித்து செயல் பட்டு இலங்கை வர்த்தகர் சங்கத்திற்கு ஈடாக ஏன் மேலாக ஆசிய நாடுகளில் பெயருடனும் புகளுடனும் திகழ வேண்டும் என்பது எனது பேராவல்.

இந்நாட்டில் ஏற்படப் போகும் மாற்றங்களிஞல் தமிழ் மக்களுக்கு பெரிதும் பயன்படக் கூடிய வகையில் யாழ் வர்த்தகர் சங்கம் விரைவில் வளர்ச்சியடைந்து அது அனைவராலும் அணுக்கப்பட வேண்டும்.

வாழ்க யாழ் வர்த்தகர் சங்கம்

வளர்க !!! வர்த்தகன் சஞ்சிகை

## விலைகளில் ......

ரணி, சீரற்ற, தொல்லைகள் பலவற்றைக் கடக்கவேண்டிய லொறிப் போக்குவரத்துச் சேவையாகும். பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு அடிக்கடி புதிய புதிய கட்டுப்பாடுகளை விதிப்பதும் அனுமதிச் சீட்டு முறைகளை அமுலாக்குவதும், தடைமுகாம்களில் சோதனை என்ற பெயரில் மணிக்கணக்கில் தாமதப்படுத்துவதும், சேதமாகிச் சீரழிந்திருக்கும் நெடுஞ்சாலைகளிலும், சுற்றுப்பாதைகளிலும் நேரமும், எரிபொருளும், உதிரிப்பாகங்களும் விரையமாகுவதும், போக்குவரத்துச் சேவைக்கான கட்டணங்களை அதிகரிக்க வைத்து பொருட்களின் விலைகளையும் அதிகரிக்க வைத்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடும் போகும்பாதை பாதுகாப்பற்றதாக இருக்கும் சமயங்களில் போக்குவரத்துச் சேவைகள் தடைப்படுவதும், வாகனங்கள் பொருட்களுடன் கடத்தப் படுவதும் பொருட் தட்டுப்பாட்டிற்கான காரணங்களாகும்.

பணப் புழக்கக் குறைவும் முன்பு இருந்ததைப் போல் இப்போது வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் கொள்வனவுக்கெனச் சுலபமாகக் கடன் பெற முடியாத சூழ்நிலையும், வர்த்தக நிலையங்களில் நடைபெறும் கொள்ளைகளும், அதிக அளவில் பொருட்களைக் கொள்வனவு செய்து இருப்பில் வைத்திருக்க முடியாத நிலையை வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. கையிருப்பில் ஓர் பொருள் தீர்ந்து போகும் நிலைக்கு வரும்போது தான் அடுத்த கொள்முதலுககான வேண்டுதல் விடுக்கப்படுகிறது. லொறிமூலம் கொழும்பிலிருந்தோ அல்லது வேறு இடங்களிலிருந்தோ அப்படிக் கொண்டுவரப்படும பொருவ இடைவழியில சூறையாடப்பட்டால, மீண்டும அதையளவு பொருடகளைத் தருவிககு, பொருளைப பறிகொடுத்த வர்ததகா பெரும் பிரயதத னஙகள எடுக்க வேணடும. காலதாமதத்திற்கு ஆளாக வேண்டும் குறித்த பொருளை அவர் மீண்டும் தருவிக்கும் வரை பற்ருக் குறையும் தட்டுப்பாடும் நிலவத்தான் செய்யும். பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படத்தான் செய்யும்.

மேற்சொன்ன காரணங்கள் பொருட்களின் விலையில் கட்டுப்பாடற்ற நிலை நிலவுவதற்கும் பொருந்தும். ஒரேமாதிரியான பொருட்களைக் கொள்வனவுசெய்யும் பல்வேறு வர்த்தகர்கள் குறித்த பொருட்களைத் தருவிக்கச் செய்த போக்குவரத்து, வழிச்செலவுகளின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்தே, குறித்த பொருட்களின் விலைகளும் வர்த்தகருக்கு வர்த்தகர் வேறுபடுகின்றன.

இவற்றை மாற்றியமைத்து சீரான ஓர். நிலைக்குக் கொண்டுவரவேண்டுமாஞல், அரசின் பிரதிநிதியான அரசாங்க அதிபரும், இம்மண்ணின் மீட்சிக்காக அரும்பாடுபடும் சகல அமைப்புக்களும் வர்த்தகர்களுக்குப் பூரண ஆதரவு வழங்கவேண்டும்.

அரசாங்க அதிபர், நியாயமான விலையில் - அதாவது பிற மாவட்டங்களில் நிலவும் விலையில் – எரிபொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க ஒழுங்கு செய்யவேண்டும்.

தடைமுகாம்களில் ஏற்படுத்தப்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்கும் வழியில் சோதனையிடும் தடைமுகாம்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

அனுமதிப் பத்திர முறை தவிர்க்கப்படுவது சாத்தியமற்றது. என்ருல் அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் அவரே வழங்க வேண்டும் - அரசபடை அலுவலகங்களில் அனுமதிப் பத்திரங்கள் பெறும் முறைமையை உடன் மாற்றி அமைக்க வேண்டும். போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தித் தரும்படி அரசை வற்புறுத்த வேண்டும். அவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படும் வேளைகளில் நஸ்டஈடு பெற்றுத்தர ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

எந்த மக்களின் விடிவிற்காக அல்லும் பகலும் அரும்பாடுபடுகிறுர்களோ, அந்தமக்களை பாதிக்கும் லொறிக் கடத்தல்களையும், பொருட்களும் உடமைகளும் களவாடப்படுவதையும் உடனடியாக நிறுத்த அமைப்புகள் அனைத்தும் ஆவன செய்ய வேண்டும்.

சங்கம், லொறிப் போக்குவரத்துச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு கூடுமானவரை குறைந்த கட்டணத்தை அறவிட்டு பொருட்களின் விலையைக் குறைக்க உதவும்படி கேட்டுள்ளது. அதிக இலாபம் வைக்காமல் நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை விற்க வேண்டும் எனச் சகல வர்த்தகர்களையும் பணித்துள்ளது.

ஒரே சீரான நியாயமான விலைகளில்மக்களுக்குவேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கக் கூடிய வழி வகைகளைச் சங்கம ஆராய்ந்து வருகிறது விரைவில் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

அதே சமயம், எம்மக்களுக்குப் பணிவான வேண்டுகோள ஒன்றையும் விடுக்க விரும்புகிறோம். கூடுமானவரை உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப பாவியுங்கள். உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்.

மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி, சங்கத்தின் நோக்கங்களையும் எதிரொலிக்க உருவாக்கப்பட்டிருக்கும் 'வர்த்தகனையும்' இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி.

### கூட்டு நடவடிக்கை


லொறிப் போக்குவரத்துச் சங்கங்களின் பிரதிநிதிகளும், எமது சங்கத்தின் பிரதிநிதிகளும், கடந்த 12-8-86-ல் எமது சங்கப் பணிமனையில் சந்தித்து, இருபகுதியினருக்கும் பொதுவான விடயங்கள் குறித்து ஆராய்ந்தபின், கடத்தல், கொள்ளை மற்றும் சகல பொதுவான விடயங்களிலும் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது எனமுடிவெடுத்துள்ளனர்.

# வர்த்தகன்

## பொதுமக்களின் பார்வைக்கு பொருட்களின் விலை விபரம்

யாழ் நகரத்திலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் விநியோகிக்கப்படும் முக்கிய பாவனைப் பொருட்கள் சிலவற்றின் விலை விபரங்களை கீழே தந்துள்ளோம் இவை தற்போது நடைமுறையிலுள்ள விலை விபரங்கள். சிலசமயங்களில் இடத்திற்கிடம் விலைகள் வேறுபடலாம். ஆனல் அதிக வேறுபாட்டிற்கு அவசியமேற்படாது. அப்படி இருப்பின் அது அதிக லாபத்தின் அறிகுறியே. அத்தகைய வேறுபாடுகளைப் பொது மக்கள் எவராவது அவதானித்தால் எமக்கும் அறியத் தாருங்கள்.

| நிறை | | பொருட்களின் விபரப் | (விலை) ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| 1 | 1 கிலோ | அரிசி - (தரம்-1) | 9 | 50 |
| 2 | ,, | ,, (தரம்-2) | 7 | 50 |
| 3 | ,, | மா | 7 | 90 |
| 4 | ,, | உ. கிழங்கு | 20 | 00 |
| 5 | ,, | மை. பருப்பு | 29 | 00 |
| 6 | ,, | உ. பருப்பு | 20 | 00 |
| 7 | ,, | மிளகாய் | 34 | 00 |
| 8 | ,, | வெந்தயம் | 17 | 00 |
| 9 | ,, | மல்லி | 17 | 00 |
| 10 | ,, | ந. சீரகம் | 37 | 00 |
| 11 | ,, | பெ. சீரகம் | 16 | 00 |
| 12 | ,, | மஞ்சள் | 45 | 00 |
| 13 | ,, | கடுகு | 40 | 00 |
| 14 | ,, | சி. வெங்காயம் | 8 | 50 |
| 15 | ,, | பி. ,, | 9 | 00 |
| 16 | ,, | தேயிலை-தரம்-1 | 45 | 00 |
| 17 | ,, | சர்க்கரை | 16 | 00 |
| 18 | ,, | கோப்பி(தரம்-1) | 95 | 00 |
| 19 | ,, | ,, (தரம்-2) | 85 | 00 |
| 20 | ,, | மிழகு | 120 | 00 |
| 21 | ,, | வெ. பூடு | 25 | 00 |
| 22 | ,, | உப்பு | 1 | 00 |
| 23 | ,, | புளி | 22 | 00 |
| 24 | 1 ,, | சீனி | 14 | 50 |
| 25 | 1. லீற்றர் | ,, | 8 | 50 |
| 26 | 1. போத்தல் | தே. எண்ணை | [illegible] | 00 |



மகன் ;

" அப்பா! ஆயிரம் மீற்றர்பாதுகாப்பு வலயம் என்றால என்ன ?"

தந்தை :

""ஷெல்" பாதுகாப்பாகச் செல்லும் பாதையில்உள்ள இடங்களைத் தான் அப்படி அழைப்பார்கள் மகனே "

### யாழ் வர்த்தகர் ......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையை எம்மவர்களுக்காக ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

ஏனைய இணக்கசபைகள் இயங்கும் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் விதிகளுக்கும் அமையவே எமது இணக்க சபையும் செயல்படும்; சபையின் முடிவுகள் அமுலாக்கப் படும்.

பிணக்குகள் பற்றிய முறையீட்டைச் சபைக்குச் சமர்ப்பிக்கும்போது: விரிவான முறையில் பூரா விபரங்களையும் உள்ளடக்கியதாக அது இருக்க வேண்டும். முதன் முதலாகச் சமர்ப்பிக்கப்படும் முறையீடா அல்லது வேறு இணக்க சபையில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு விவகாரம் சம்பந்தப்பட்ட முறையீடா என்ற விபரங்கள் தரப்படவேண்டும். அத்தோடு இணக்கசபை எடுக்கும் எந்த முடிவிற்கும் நான் கட்டுப்படுவேன் என்ற வாக்குறுதியும் அதில் இடம்பெறவேண்டும்.

கூடுமானவரை வர்த்தகர்கள் தமக்கிடையே ஏற்படும் பிணக்குகளை தமக்குள்ளேயே பேசி சுமூகமான முடிவுக்கு வரச் சகல முயற்சிகளையும் முதலில் மேற்கொள்ளவேண்டும். முடியாத கட்டத்தில்தான் சபைக்கு முறையிடவேண்டும்.

### அரச . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறமதங்களை அழிப்பதன் மூலம் புத்தமதத்தை வளருங்கள் எனப்புத்தரே சொல்லியதில்லை. பிறகு ஏன் இந்தப் புதிய சித்தாந்தம்? சித்தார்த்தன் காட்டிய வழியில் சசல்வதாகச் சொல்பவர்கள் இதனைச் சிந்திக்கவேண்டும். இத்தகைய அழிவு வேலைகளை உடன் நிறுத்தவேண்டும்,

### ஊற்றறு . . .

3-ம் பக்கத் தொடர்ச்சி

அங்கு நாம் கண்டவையும் கேட்டவையும் எம்மையெல்லாம் பிரமிப்பில் ஆழ்த்தின. நாம் எல்லோரும் வெறும் கிணற்றுத் தவளைகள்தான் என்ற பிரமையை உண்டுபண்ணின.

மண்ணை மீட்க எடுக்கப்படும் முயற்சிகளைப் பார்ப்பதிலும் கேட்பதிலும் எம்மை மறந்திருந்த எமக்கு, மீட்கப்படும் மண்ணை வளமாக்க, மிஞ்சும் மக்கள் தன்னிறைவோடு வாழ, எதிர்காலச் சந்ததியினருக்குச் சுபீட்சப் பாதையைக் காட்ட, நாளும் பொழுதும் பாடுபடும் பல நல்லவர்களும் எம்மவர் மத்தியில் இருப்பதை எமக்கெல்லாம் அன்று நினைவு படுத்தினார்கள்.

ஊற்று அமைப்பு, உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு உருவான ஒரு மக்கள் சேவை அமைப்பு. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இவ்வமைப்பு, உலகநாடுகள் பலவற்றின் உதவியைப் பெற்று ஆக்கபூர்வமான பல திட்டங்களை அமுலாக்க அயராது பாடுபடுவதை கண்ணாரக் கண்டோம்.

எத்துறையில் உள்ளவர்களானாலும் சரி, ஏற்ற ஆலோசனைகளை, கேட்கும் உதவிகளை, எந்நேரமும் வழங்கக் காத்திருக்கிறார்கள்.

விவேகத்துடன் உருவாக்கியிருக்கும் நல்ல பல திட்டங்களை வேகத்துடன் செயற்படுத்த நிதிநெருக்கடி இவர்களுக்குத் தடையாக இருப்பதையும நாம் அங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எமது நெஞ்சங்களை இது நெருடியது. மகத்தான ஒரு பொதுப்பணிக்கு, அதுவும் இம்மண்ணின் மக்களுக்கு, தம்மையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் இவர்களுக்கு, எம்மால் முடிந்தளவு உதவவேண்டும் என்ற எண்ணம் எம்மையறியாமலேயே எம்முள் எழுந்தது.

எதுவெதுக்கோவெல்லாம் எம்மிடம் எஞ்சுவதை எல்லாம பகிர்ந்தளிக்கும் நாம், எமது எதிகால சுபீட்சத்தின் வழிகாட்டியான ஊற்று அமைப்பிறகும எம்மால முடிநதளவு பொருளுதவியைச் செய்ய வேண்டிய கடமைப்பாடுடையவர்களாக இருக்கிறோம்.

இவ்வமைப்புக்கு வர்த்தகர்கள ஒவ்வொருவரும் இயன்றளவு பொருளுதவியைத் தவறாது செய்யவேண்டும் என பத்த சங்கத்தின் பணிவான வேண்டுகோள.

### மலசலகூடம்

நெரிசல் மிகுந்த யாழ் பஸ் நிலையத்திலோ அல்லது அதற்கு அருகாமையிலோ, பொதுமக்களின் பாவனைக்கெனப் பொது மலசலகூடம் எதுவும் கிடையாது. இதனால் பஸ் நிலையத்திற்கு வரும் பிரயாணிகளும் கடைவீதிகளுக்கு வரும் பொதுமக்களும் பல அசௌகரியங்களுக்கு ஆளாவதோடு பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள குறுக்கு வீதிகளும், ஒழுங்கைகளும். அசுத்தமாக்கப்படுகின்றன. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடையத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுத்து, உடன் ஆவன செய்யவேண்டும்.

### இதுவரை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாதவரல்ல தமிழர்களுக்கென ஓர் பாரம்பரிய பிரதேசம் இந்நாட்டில் இருப்பதையும் அவர் தெரியாதவரல்ல. இழந்த மண்ணையும், உரிமைகளையும் மீட்கத்தான் தமிழ் பேசும் இளைஞர்களும், யுவதிகளும் தமது உயிர்களை அர்ப்பணம் செய்கிறார்கள் என்பதும் அவருக்குப் புதிதான ஒன்றல்ல.

வரலாற்றில் தான் ஒரு சரித்திர நாயகனாகவேண்டும். என அதி உத்தமர் விரும்பினால். துணிவோடும் தூயமனத்தோடும் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்கள் தம்மண்ணில் சுதந்திரமானவர்களாக வழா உடனடியாக வழி வகுக்க வேண்டும். அப்போதுதான் இந்நாட்டில் உள்ள சகல இன மக்களும் ஒற்றுமையுடனும் சுபீட்சத்துடனும் வாழக்கூடியதாக இருக்கும்.

### இதயமற்றவர்களிடம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணைப் பாதையை உபயோகிக்க முடியாத நிலை உருவானதிலிருந்து தீவுப்பகுதிமக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவர்களின் பிரயாணக் கஸ்டங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. அநியாயமான பிரயாணச் செலவுகள் ஒருபுறமும், அபாயகரமான வழிப்பயணம் மறுபுற முகமுமாக அவதிப்படுகின்றனர்.

இந்த அட்டூழியங்களையும். அனர்த்தங்களையும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலமும் அகிம்சையான நடவடிக்கைகள் வாயிலாகவும் அரச அதிபர் ஊடாக ஆட்சியளார்களுக்கு அடிக்கடி மக்கள் தெரியப்படுத்தியும் விமோசனம் கிடைக்கவில்லை. நிலைமையில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை

இதயமற்றவர்களிடம் இரக்கத்தை எதிர்பார்ப்பதைவிட இறைவனின் தீர்ப்பிற்கு விட்டு விடுவதே விவேகமானது.

### நாம் சாதித்தவை ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையீடும் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தாக்குதல் நடத்தியவர்களுடன் இது விடையமாக நாம் பலதடவை தொடர்புகொண்டும், எதிர்பார்த்த சமரசத் தீர்வு இதுவரை ஏற்படவில்லை.

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதி 212ம் இலக்கத்தில், ஏசியன் என்ரப்பிறைசஸ் என்ற தாபனத்தினரை வலுக்கட்டாயமாக வெளியேற்றியதோடு, இரண்டு இலட்ச ரூபாவிற்குமேல் பெறுமதியான பொருட்களையும், அபகரித்த விவகாரம் எமது கவனத்திற்கு வந்தது இதனைப்பற்றி விசாரித்து நீதியான முறையில் தீர்ப்பு வழங்கும்படி கேட்டு யாழ் மத்திய இணக்கசபையிடம் விண்ணப்பதாரரின் முறையீட்டைச் சமர்ப்பித்திருக்கிறோம்.

வர்த்தகர்களிற்கிடையேயான பிணக்குகளை விசாரித்து இணக்கமான முடிவுகளை ஏற்படுத்தும் வகையில் "யாழ் வர்த்தகர்சங்க இணக்கசபை" என்ற பெயரில் ஓர் இணக்க சபையைஉருவாககியுள்ளோம்.

திரு. எஸ். வி. முருகேசு அவர்களின் தாபனத்திற்குக் கொழும்பிலிருந்து கொணடு வரப்பட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதையும் ஏனையலொறிக் கடத்தல்களையும் நாம் வன்மையாகக் கண்டித்ததோடு, பூரண கடையடைப்புச் செய்து வர்த்தகர்களின் ஏகோபித்த எதிர்ப்பையும் தெரிவித்தோம். இது விடயத்தில் யாழ் முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியத்தின ஆதரவையும் பெற்றோம்.

மண்டைதீவுக் கடற்கரையில் இடம்பெற்ற படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்தும், உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் பூரண கடையடைப்பு நடாத்தியதோடு, கொலையுண்டவர்களின் குடும்பங்களுக்கான நிவாரண நிதிக்கு 12,520/- ரூபாவைச் சேர்த்துக் கையளித்தோம்.

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழுவின் முடிவுக்கு அமைய இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இனக்கலவரங்களில் உயிர் நீத்தவர்களுக்காகத் துக்கம் அனுஷ்டித்தும் கடந்த யூலை 25ம்நாள் கடையடைப்புக்கு எற்பாடு செய்தோம்.

கடந்த 17-7-86 ல் அரசாங்க அதிபரை நேரில சந்தித்த எமது சங்கத்தின் துணைககுழு மூலம், வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்தரப்பட்ட பிரச்சனைகளைப்பற்றியும் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னோம்.

ஆகஸ்ட் 4ம் தேதி இரவு அரசபடையினரால் கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் பெரியகடை வீதியிலுள்ள பல வர்த்தக ஸ்தாபனங்கள் பெரும் சேதத்துக்குள்ளானதை அரசாங்க அதிபரின கவனத்திற்கு கொண்டுவந்ததோடு, இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதிருக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக கொண்டோம்.

அமைப்புகளின் ஆதரவுடன் எமக்கென ஓர் பாதுகாப்புச் சேவையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

### வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச்சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

இன்று மக்கள் இம்மண்ணிலே காலனோடு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் தம் உயிரை துச்சமென மதித்து மக்களுக்கு வர்த்தகர்கள் ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளின் மத்தியில் வர்த்தகர்களுக்கும் மக்களுக்குமிடையில் ஒரு பாலமாக அமைய உருவாகியுள்ள இவ் வர்த்தகன் எனும் பத்திரிகை எம்மக்களிடையே உறவாடி என்றென்றும் அளவில்லா சேவைகளை ஆற்றவேண்டுமெனக்கூறி, ஆல்போல் தழைத்து ஓங்க வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகிறோம்